# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1931 - 2015 සැප්තැම්බර් මස 04 වැනි සිකුරාදා - 2015.09.04**

*1931 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1398 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1400 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2015, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : இல. 42, றெசிடன்சீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி பதிவிலக்கம்* : பீவீ 107661
*கம்பனி கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2015.08.11
*கம்பனி பதிவு அலுவலகம்* : இல. 42, கொத்தலாவல மாவத்தை, கொழும்பு 4

பினான்சியல் அன்ட் அசோசியேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

9-77

---

## கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8(2) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் முன்னைய பெயர்* : சீ. கே. டி. ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 3844
*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 104, பாகொட வீதி, பிட்டகோட்ட
*கம்பனியின் புதிய பெயர்* : டின்ரோ ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பெயர் மாற்றிய திகதி* : 2015.08.06

பிஸ்னெஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 45, பிரேபுறூக் வீதி,
கொழும்பு 2,
2015, ஓகத்து 7.

9-72

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் கெங்கல்ல, பன்சல வீதி, இலக்கம் 59 எனும் இடத்தில் வசிக்கும் சுதும்பொல பின்வத்தே கெதர நிஹால் அல்லது நிஹால் சேனாரத்தின, பாலகெதர நந்தா மெனிக்கே அபயறுவான் ஆகிய எங்களால் இரஜவல, திகன புதிய நகரம், இலக்கம் 66 எனும் இடத்தில் வசிக்கும் குலகே தரங்க பெரேரா என்பவருக்கு வழங்கப்பட்ட 2006.03.09 ஆந் திகதி கண்டி, தெல்தெனிய பிரசித்த நொத்தாரிசு கங்கானம்கமகே சரத் பிரேமகுமார என்பவரால் எழுதப்பட்டு உறுதிப்படுத்திய 4478 ஆம் இலக்க விசேட அற்றோணித் தத்துவத்தை 2015.08.01 ஆந் திகதியிலிருந்து செல்லுபடியற்றதாக்கப்படுகின்றது என எல்லோருக்கும் அறியத்தருகின்றோம். இதன் பின்பு எங்களுக்காக அவர் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கைகளுக்கும் நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல என்பதையும் அறியத்தருகின்றோம்.

சுதும்பொல பின்வத்தே கெதர நிஹால் அல்லது
நிஹால் சேனாரத்தின,
பாலகெதர நந்தா மெனிக்கே அபயறுவான்.

9-40

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : டிஜிட்டல் ஹெல்த் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி பதிவு இலக்கம்* : பீவீ 107776
*கம்பனி பதிவுசெய்யப்பட்ட முகவரி* : இல. 475, யூனியன் பிளேஸ், கொழும்பு 2
*கூட்டிணைப்புத் திகதி* : 2015, ஓகத்து 14

டிஜிட்டல் ஹெல்த் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

9-67

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : நிலம்பரா ஹொடெல் (பீவீரீ) எல்ரீடி
*பதிவு இலக்கம்* : பீவீ 105933
*கூட்டிணைப்புத் திகதி* : 2015.05.28
*பதிவு முகவரி* : இல. 339, வேவல்துவ வீதி, ஹுணுப்பிட்டிய, வத்தளை

கம்பனிச் செயலாளர்.

9-27

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : தினன் என்ஜினியர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 73547

*பதிவு முகவரி* : இல. 55, டி. எம். கொலம்பகே மாவத்தை, கொழும்பு 5

*கூட்டிணைப்புத் திகதி* : 02.08.2010

பீ. எல். மானவடு,
கம்பனிச் செயலாளர்.

9-78

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : தெவிநுவர ரெவெரீ (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 90314
*பதிவுத் திகதி* : 03.01.2013
*பதிவு முகவரி* : இல. 6, பிரிவுன்ஸ் ஹில், மாத்தறை

சுதர்ஷன புஷ்பகுமார,
கம்பனிச் செயலாளர்-0718322110.

9-90

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : வெஸ்டர்ன் கன்ஸ்ட்ரக்ஷன் கோர்ப்பரேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 106731
*பதிவுசெய்த முகவரி* : இல. 212, தம்பே வீதி, பிலியந்தலை
*கூட்டிணைப்புத் திகதி* : 2015.07.03

ஷாரா எரிகா லோரன்ஸ்,
கம்பனிச் செயலாளர்.

9-39

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ஹெலிபீஸ் ரேசிங் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 107004
*பதிவு முகவரி* : இல. 52/3, வண. தம்மரத்ன மாவத்தை, மாதிவெல, கோட்டே
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 14.07.2015

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

9-32

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நீர்கொழும்பு, மன்குழிய, இல. 35ஏ இல் வசிக்கும் தலகலகே கெலும் சுரேஸ் பிரனான்து மற்றும் குருகுலசூரிய தனுசிகா ஸானி பிரனான்து ஆகிய எம்மால் எமது சட்டபூர்வமான பிரதிநிதியாக நீர்கொழும்பு, மன்குழிய, இல. 35/1 இல் வசிகும் குருகுலசூரிய மாரி சிசிலியா மாலனி பிரனான்து என்பவரை நியமித்து இத்தாலி, ரோம் நகரில் இலங்கைத் தூதரக அலுவலகத்தில் 2013.01.03 ஆந் திகதி உறுதிசெய்யப்பட்ட விசேட சட்டபூர்வமான அனுமதிப்பத்திரத்தினால் வழங்கப்பட்ட சட்டபூர்வமாகச் செயல்படும் அற்றோணி அதிகாரப்பத்திரத்தை இரத்துச் செய்வதாக இத்தால் அறிவித்துக் கொள்கிறோம்.

தலகலகே கெலும் சுரேஸ் பிரனான்து
மற்றும்
குருகுலசூரிய தனுசிகா ஸானி பிரனான்து.

9-133

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

தித்தபத்தர, யட்டோவிட, "ரிவர் பீரிஸ்", இல. 60/6 எனும் முகவரியில் வசிக்கும் இலந்தாரி தேவகே துஷார ஹேமந்த ஆகிய நான் பிரசித்த நொத்தாரிசு பி. எம். பி. பீ. அபேரத்ன அவர்களால் 2013, நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்திய இல. 493 எனும் விசேட அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் மூலம் கொழும்பு 5, லயனல் எதிரிசிங்க மாவத்தை, இல. 49 எனும் முகவரியில் வசிக்கும் றொனல்ட் மைக்கல் ஸ்டென்லி (தே. ஆ. அ. அ. இல. 603390997V) என்பவருக்கு கையளிக்கப்பட்ட விசேட அற்றோணி தத்துவப்பத்திரம் 2015, ஓகத்து மாதம் 15 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

இலந்தாரி தேவகே துஷார ஹேமந்த.

9-91

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

திஷானி ஆன் டிவொன் ராஜ்குமார் (திருமணத்திற்கு முன் மெடொக்) ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு ஐராங்கிக கபிலரத்ன சஹபந்து என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும், 2008.02.28 ஆந் திகதியிடப்

பட்டதும், மாத்தாகொட, பிரசன்ன உயன, 193/3 ஆம் இலக்கத்தைச் சோந்த ஹேவ சஹபந்து ஈவ்லின் ஜயவதி மற்றும் ஜோர்ஜ் ஒஸ்கார் டொட்வெல் மெடொக் ஆகிய இருவரையும் எனது அற்றோணித் தத்துவக்காரர்களாக நியமிக்கப்பட்டஅற்றோணித் தத்துவத்தை 2015, ஓகத்து மாதம் 14 ஆந் திகதி முதல் இல்லாதொழித்து இரத்துச் செய்துள்ளேன் எனவும், இதற்கமைவாக மேற்கூறப்பட்ட அற்றோணித் தத்துவத்தினூடாக மேற்கொள்ளப்படும் எவ்வித செயற்பாட்டிற்கும் நான் பொறுப்பாளரல்ல என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

திஷானி ஆன் டிவொன் ராஜ்குமார்
(திருமணத்திற்கு முன் மெடொக்).

9-107

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

நுகேகொட, கங்கொடவில, பப்பிலியான வீதி, 43 ஆம் இலக்கத்திலுள்ள வெத்தசிங்க ஆராச்சிகே டொன் சிறிவர்தனே (383210372V எனும் தேசிய ஆள் அடையாள அட்டையை உடையவர்) ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு பி. டி. ரேணுக்கா பிரியதர்ஷனி என்பவரால் அத்தாட்சிப் படுத்தப்பட்டதும் 2007, ஓகத்து மாதம் 7 ஆந் திகதிய 3080 ஆம் இலக்கத்தை உடையதும் பிலியந்தல, வைத்தியசாலை வீதி, 14 ஆம் இலக்கத்திலுள்ள சமரவிரிதுவலகே ரணசிங்க (60148377V எனும் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கத்தை உடையவர்) என்பவருக்கு எனது சட்டபூர்வமான அற்றோணியாக செயற்படுவதற்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை உடனடியாக செயல்வலுப் பெறும் வகையில் இல்லாதொழித்து மற்றும் இரத்துச் செய்துள்ளேன் எனவும், இவ்வினாடியிலிருந்து அவரினால் மேற்கொள்ளப்படும் எவ்வித செயற்பாட்டிற்கும் நான் பொறுப்பேற்கமாட்டேன் எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

வெத்தசிங்க ஆராச்சிகே டொன் சிறிவர்தனே.

9-104

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

உடுகுக்குரிபிரிட்டிய, கொஸ்ஹேன, இல. 4/13ஏ எனும் முகவரியில் வசிக்கும் ஹந்துகல முதியன்செலாகே மாலினி பத்மலதா (தே. ஆ. அ. அ. இல. 665311520V) ஆகிய நான் கஹடஓவிட, ஒகொடபொல, இல. 55 எனும் முகவரியில் குடியிருக்கும் ரத்நாயககே துஷார ஜயசிரி ரத்நாயக (தே. ஆ. அ. அ. இல. 772432615V) என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு ஜே. ஏ. கே. ஜயகொடி அவர்களால் 2015.08.17 ஆந் திகதி எழுதி உறுதிசெய்யப்பட்ட இல. 3646 எனும் அற்றோணி தத்துவப்பத்திரத்தை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் இத்தால் இரத்துச் செய்கிறேன். மேற்படி ரத்நாயககே துஷார ஜயசிரி ரத்நாயக்க என்பவரால் இன்று தொடக்கம் புரியப்படும் ஏதேனும் நடவடிக்கைகளுக்கு நான் பொறுப்புக் கூற மாட்டேன் என இதன் மூலம் அறிவித்தல் தருகிறேன்.

ஹந்துகல முதியன்செலாகே மாலினி பத்மலதா.

9-33

---

## ஏல விற்பனைகள்

### ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ – கல்கிஸ்ஸ கிளை

(முன்பு ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என்று சொல்லப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பெறுமதிமிக்க ஆதனம் பகிரங்க ஏல விற்பனை*

கடன் எடுத்த ஜோனமஸ் அப்பரல் (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் காணியை ஈடுவைத்த வைத்யரத்ன ஏரத் முதியன்சலாகே மனோஜ் ரம்யா புஸ்பா காந்த வைத்யரத்ன ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ சார்பாக மொரட்டுவ பிரசித்த நொத்தாரிசு 2004.05.30 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 6931 மற்றும் 2005.11.29 ஆந் திகதிய முறி இலக்கம் 7230 மற்றும் 2007.06.26 ஆந் திகதிய முறி இலக்கம் 7934 மற்றும் 2008.05.06 ஆந் திகதிய முறி இலக்கம் 8331, 2012.08.21 ஆந் திகதிய முறி இலக்கம் 9955 மற்றும் 2012.12.03 ஆந் திகதிய முறி இலக்கம் 10053 மூலம் செலுத்தவேண்டிய கொடுப்பனவுகளில் தவறுகை புரிந்துள்ளதாலும் மற்றும் மிகுதித் தொகையும் வட்டியும் ஏலதாரர் கட்டணங்களையும் அறவிடுவதற்காக இதன்கீழ் விபரிக்கப்பட்ட காணியை ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீயினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் பகிரங்க ஏலம் மூலம் 2015, செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி (2015.09.23) மு. ப. 11.00 மணிக்கு விற்கப்படும்.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லேபத்து, சல்பிட்டி கோரளையில் தெஹிவளை-கல்கிஸ்ஸ மாநகர சபை எல்லையில் வாட் இல. 18, வித்யாலய, கல்கிஸ்ஸ, காலி றோட், கட்டிட இலக்கங்கள் 330 மற்றும் 330ஏ ஆகியன அமைந்துள்ள காட்காவத்த என்ற காணியின் நில அளவையாளர் ஜே. எம். டபிள்யூ. சமரநாயக்க 2003.06.16 ஆந் திகதிய வரைபட இலக்கம் 1886 இல் காண்பிக்கப்பட்ட பகுதிபடுத்திய லொட் ஏ எனும் காணியின் விஸ்தீரணம் ஒன்பது தசம் எட்டு மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 9.83பே.) மற்றும் இக்காணியிலுள்ள கட்டிடங்கள் அனைத்தும் சேர்த்து.

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்கு.**- 2014.09.08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியையும், 2014.09.12 ஆந் திகதிய ''லக்பிம'', ''டெயிலி மிரர்'', ''தினக்குரல்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் விதம்.**- காலி றோட் ஊடாக கல்கிஸ்ஸ வர்த்தக மத்திய நிலையம் சென்று கட்டிட இலக்கங்கள் 330 மற்றும் 330ஏ ஆகியவற்றை அடைய முடியும். இங்கு ஜோனமஸ் அப்பரல் (பிறைவேட்) லிமிட்டெட் வர்த்தக நிலையம் அமைந்துள்ளது. தேசிய சேமிப்பு வங்கிக் கட்டிடம் முன்னால் கல்கிஸ்ஸ பஸ் தரிப்பிடம் மற்றும் சுப்பர் மார்க்கட்டை அடையலாம்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.**- ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு காசாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;

*(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;*

*மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்குச் செலுத்தல் வேண்டும். மிகுதிப் பணம் 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் 10% சதவீத முற்பணம் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது. காணி மீண்டும் ஏலத்தில் விடப்படும்.*

*வேறு விபரங்களுக்காக.- சிரேஷ்ட முகாமையாளர் (அறவிடுதல்), ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி இல. : 011-2664664.*

*எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),*
*சிரேஷ்ட உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,*
*நீதிமன்ற ஆணையாளர்.*

*இல. 182,*
*3 ஆவது மாடி,*
*புதுக்கடை வீதி,*
*கொழும்பு 12.*
*தொலைபேசி/தொலைநகல் இல. : 011-2396520, 011-2445393.*

*9-94*

---

**ஹட்டன் நஷனல் வங்கி ப.வ.க. – நுவரெலியா கிளை**
*(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

***பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், நுவரெலியா செயலாளர் பிரிவினுள் ஓய பலாத்த கோறளை, நுவரெலியா மாநகர சபை எல்லைகளுக்குள், 535டி-நுவரெலியா மத்தி கிராம அலுவலர் பிரிவினுள் இராணுவ வீதியில் அமைந்துள்ளதும் ஹெவ்லொக் டிரைவ், வரிமதிப்பு இல. 6/1, தற்போது வரிமதிப்பு இல. 9/2 ஐக் கொண்டதும் "ஹா வெலியபத்தன" என அழைக்கப்படும் காணியின் உள்ளிருந்து புறமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் என். லியனகே அவர்களால் தயாரிக்கப்பட்டு 2013, மே 14 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 998 இல் குறிப்பிடப்பட்டு துண்டு இல. 2 என அடையாளமிடப்பட்டதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 23.6பே.)***

*(நுவரெலியாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. பீ. கணபதிப்பிள்ளை அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2013, மே 29 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 5714 இன் மீது ஈடுவைக்கப்பட்டு, அடைமானம் வைக்கப்பட்டு வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ள கடப்பாடுடையவரான வைத்திலிங்கம் இராஜேந்திரன் துசின்நாத் எனும் இராஜேந்திரன் துசிநாதன் இற்கு அளிக்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி ப.வ.க. இற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள ஆதனம்)*

***ஆதனத்தைச் சென்றடையும் வழி.***- *நுவரெலியா நகரிலிருந்து பதுளை வீதி வழியே உடபுசல்லாவை சந்தி வரை ஏறக்குறைய 300 மீற்றர் தூரம் சென்று உடபுசல்லாவை வீதிக்கு இடப்பக்கம் திரும்பி, ஏறக்குறைய 200 மீற்றர் தூரம் செல்லவும். அதன் பின்னர், மேல் லேக் வீதிக்கு வலப்பக்கம் திரும்பி மேலும் ஏறக்குறைய 50 மீற்றர் சென்று, ஹெவ்லொக் டிரைவிற்கு இடப்பக்கம் திரும்பி ஏறக்குறைய 200 மீற்றர் செல்லவும். மோட்டார் போக்குவரத்து செய்யக்கூடிய மண் வீதிக்கு இடப்பக்கம் திரும்பி ஏறக்குறைய 100 மீற்றர் செல்லவும். இவ்வீதி விற்பனைக்குரிய ஆதனத்திற்கு இட்டுச் செல்லும் வீதியாகும்.*

*மேலே விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை 2015, செத்தெம்பர் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நாம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வோம்.*

**இரண்டாம் ஆதனம் :**

***பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், நுவரெலியா செயலாளர் பிரிவினுள் ஓய பலாத்த கோறளை, நுவரெலியா மாநகர சபை எல்லைகளுக்குள், 534-கந்தப்பளை கிராம அலுவலர் பிரிவினுள் கந்தப்பளை கிராமத்தில் அமைந்துள்ளதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. எல். டி. வை. விஜேவர்தன அவர்களால் தயாரிக்கப்பட்டு 1986, யூலை 11 ஆந் திகதிய வரைபடம் இல. 3082 இல் குறிப்பிடப்பட்டு துண்டு இல. 2 என அடையாளமிடப்பட்டதுமான காணியினது) ஏல விற்பனை***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 3.40பே.)***

*(கண்டியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எம். எஸ். பெரேரா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2013, யூலை 11 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 3221 இன் மீது ஈடுவைக்கப்பட்டு, அடைமானம் வைக்கப்பட்டு வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ள ஈடுவைத்தவரான வைத்திலிங்கம் இராஜேந்திரன் துசின்நாத் எனும் இராஜேந்திரன் துசிநாதன் இற்கு அளிக்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி ப.வ.க. இற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள ஆதனம்)*

***ஆதனத்தைச் சென்றடையும் வழி.***- *கந்தப்பளை நகரிலிருந்து பார்க் வீதி வழியே ஏறக்குறைய 50 மீற்றர் செல்ல, விற்பனைக்குரிய ஆதனம் வீதியின் (பார்க் வீதி, வரிமதிப்பு இல. 8 மற்றும் 10, கோயில் வீதியைத் தொடர்ந்தாற்போல்) வலப்பக்கத்தில் அமைந்துள்ளது.*

*மேலே விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை 2015, செத்தெம்பர் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை ந. ப. 12.00 மணிக்கு அதே இடத்தில் நாம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வோம்.*

***தீர்மான அறிவித்தலுக்கு.***- *2015, யூலை 24 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2015, யூலை 29 ஆந் திகதிய "லக்பிம", "தினகரன்" மற்றும் "டெயிலி மிரர்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

***கொடுப்பனவு செய்யும் விதம்.***- *வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாகச் செலுத்த வேண்டும் :-*

*(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;*
*(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் அதிகார சபை வரி 1% (ஒரு வீதம்) ;*
*(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் மீது 2 1/2% (இரண்டரை வீதம்) ;*

(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 500 ரூபா ;
(5) விற்பனைச் செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (இருப்பின்) ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய இலங்கை அரசினால் அல்லது வேறேதேனும் அதிகார சபையினால் அமுலாக்கப்பட்டு எப்போதும் ஏற்புடைத்தான கட்டணங்கள், வரிகள், வரிக்கட்டணங்கள் அல்லது வேறேதேனும் வரிகள் ஆகியவற்றுடன் சேர்த்து கொள்வனவு விலையின் மிகுதி 90%.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங் களையும் "கொழும்பு 10, ரீ. பி. ஜயா மாவத்தை, இல. 479, ஹற்றன் நஷனல் வங்கி ப. வ. க., உதவிப் பொது முகாமையாளர்-அறவீடுகள்" அவர்களிடம் பார்வையிட முடியும். தொலைபேசி இல. : 011-2661816 ; தொலைநகல் இல. 011-2661835.

டல்லாஸ் கெலார்ட்ஸ்,
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல. 146/3, கல்தேரா கார்டின்ஸ்,
துட்டுகெமுனு தெருவிற்கப்பால்,
கொஹுவளை.
தொலைபேசி இல. : 011-4302622, 011-24302623.
தொலைநகல் இல. : 011- 2856013.

9-102

---

**டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

(டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ (முன்னர் டீஎப்சீசீ வங்கி என அழைக்கப்பட்டது)

**பெறுமதிமிக்க சொத்துக்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் ஏல விற்பனை**

***25268 மற்றும் 26634 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்***

***மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளே, றாகம பற்று, கம்பஹா நகர சபை எல்லைகளுக்கு உட்பட்ட, கம்பஹா பஹலகம கிராமத்தில் அமைந்துள்ள 233-233/1, ஜா-எல வீதி எனும் முகவரியைக் கொண்ட ருகட்டனகஹகும்புர என அழைக்கப்படும் (தற்போது உயர் நிலம்) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. யூ. செனரத் அவர்களால் வரையப்பட்ட 1999 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் திகதியிடப்பட்ட 352 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு ஏ எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு அதிலுள்ள கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக.***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1று. 10.33பே. ; 0.1273 ஹெக்டெயர்)***

***கீழே விபரிக்கப்படும் இயந்திர உபகரணங்களுடன் :***

| | ***விபரம்*** | ***அளவு*** |
|---|---|---|
| 1. | ***பாண்ட்-சோ (லோகல்)*** | ***01*** |
| 2. | ***மோல்டிங் மெஷின் (16 அங்குல பிளேட்)*** | ***01*** |
| 3. | ***வுட்வேர்க்கிங் மெஷின் (இங்கிலிஷ் ஒரிஜின்)*** | ***01*** |
| 4. | ***வுட்வேர்க்கிங் மெஷின் (லோக்கல்)*** | ***01*** |
| 5. | ***திக்னெஸ் பிளானர் மெஷின் (புலாரெயின்)*** | ***01*** |
| 6. | ***திக்னெஸ் பிளானர் மெஷின் (இத்தாலி)*** | ***01*** |
| 7. | ***வுட்வேர்க்கிங் மெஷின் (ஜப்பான்)*** | ***01*** |
| 8. | ***வுட்வேர்க்கிங் மெஷின் (லோக்கல்)*** | ***01*** |
| 9. | ***பிளானர் மெஷின் (லோக்கல்)*** | ***01*** |
| 10. | ***வுட்வேர்க்கிங் மெஷின் (ஜப்பான்)*** | ***01*** |
| 11. | ***பாண்ட்-சோ (லோக்கல்)*** | ***01*** |
| 12. | ***ஜிக்சோ மெஷின் (லோக்கல்)*** | ***01*** |

*(கம்பஹா பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். என். டபிள்யூ. ராஜகருணா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதியிடப்பட்ட 25268 ஆம் இலக்க மற்றும் 2009 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதியிடப்பட்ட 26634 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம், கம்பஹா பஹலகமவில் தயாஷாந்த லீ வெலந்தசல எனும் பெயரில் தனியுரிமைத்துவத்துடன் வியாபாரத்தை நடத்தி வரும் நிஸ்ஸங்க ஆரச்சிகே தயாசாந்த அவர்களால் டீஎப்சீசீ வங்கிக்கு முன்னர் (டிவலப்மன்ட் பைனான்ஸ் கோர்ப்பரேஷன் ஒப் சிலோன் என அழைக்கப்பட்ட) அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)*

*டீஎப்சீசீ பீஎல்சீ வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி புதன்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் அதே இடத்தில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.*

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு 73,000 ரூபா ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 011-2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வங்கி பீஎல்சீயின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

"முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது."

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்,
123 வருட கால மகோன்னத
சேவையுடன்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 011-2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

9-34

---

### மக்கள் வங்கி - காலி கோட்டைக் கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி எனும் அதிகாரத்தின்கீழ் விற்பனை அறிவித்தல்

#### பகிரங்க ஏல விற்பனை

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் 2015.09.29 ஆந் திகதி பி. ப. 10.30 மணிக்கு இங்கு கீழ்க்கண்ட விபரங்களைக் கொண்ட சொத்துக்கள், அது அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

#### ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விபரம்

தென் மாகாணத்தில், காலி மாவட்டத்திலே, காலி கடவத்சதரைக்குள் காலி மாநகர சபை எல்லைக்குள் கும்பவெல்லே ரிச்மன்ட்கந்த வீதியில் வருமான வரி இலக்கம் 24 எனும் கலாசிகெவத்தயைப் பிரித்துள்ள இலக்கம் 1 எனும் பகுதியை உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. டபிள்யூ. எஸ். எஸ். அம்பவத்த அவர்களினால் அளந்து ஒழுங்குசெய்யப்பட்ட 2005.10.19 ஆந் திகதிக்குரிய 1007 ஆம் இலக்க வரைபடத்தின்படி பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 1 எனும் பதின்மூன்று தசம் சைபர் ஆறு பேர்ச் (0ஏ. 0றூ. 13.06பே.) கொண்ட மிகப்பெரிய காணியும் அங்குள்ள கட்டிடங்கள், மரங்கள், பழவர்க்கங்கள், பயிர்ச்செய்கை உட்பட அனைத்துமாகும்.

மேற்கூறப்பட்ட காணிக்கு போக்குவரத்துச் செய்வதற்காக கீழ்க்கண்ட காணிகளில் பாதைக்கான உரிமையையும் கொண்டுள்ளது :-

1. கும்பல்வல்லேயில் அமைந்துள்ள ரிச்மண்ட் கந்தை வீதியில் உள்ள கலாசிகெவத்தயின் வருமான வரி இலக்கம் 22, 24 எனும் பகுதிக்கான போக்குவரத்துச் செய்வதற்கான வழியான இலக்கம் 4 எனும் துண்டுக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் சீ. ஆர். அம்பவத்த அவர்களினால் 1971.06.14 ஆந் திகதியில் அளந்து ஒழுங்கு செய்யப்பட்ட 213 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் இலக்கம் 4 எனும் சைபர் தசம் ஐந்து மூன்று பேர்ச் (0ஏ. 0றூ. 0.53பே.) விஸ்தீரணம் கொண்ட மிகப்பெரிய காணியாகும்.

2. கும்பல்வல்லேயில் அமைந்துள்ள ரிச்மண்ட் கந்த வீதியில் உள்ள கலாசிகெவத்தயின் வருமான வரி இலக்கம் 22, 24 எனும் பகுதிக்கான போக்குவரத்துச் செய்வதற்கான வழியான இலக்கம் 5 எனும் துண்டுக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் சீ. ஆர். அம்பவத்த அவர்களினால் 1971.06.14 ஆந் திகதியில் அளந்து ஒழுங்கு செய்யப்பட்ட 213 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் ஒன்று தசம் எட்டு ஒன்று (0ஏ. 0றூ. 1.81பே.) விஸ்தீரணம் கொண்ட மிகப்பெரிய காணியாகும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2012.03.23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையிலும், 2012.08.16 ஆந் திகதிய "தினமின", "டெயிலி நியுஸ்", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட ஏல விற்பனைப் பகுதியைக் கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**- காலி நகரத்திலிருந்து கொழும்பு திசையாக செல்ல தென்படும் கலுவெல்லே சந்தியிலிருந்து தெற்காக உள்ள ரிச்மண்ட் கந்த வழியாக 100 மீற்றர் செல்ல பாதையின் வலதுபக்கமாக வருமான வரி இலக்கம் 24 எனும் இக்காணி அமைந்துள்ளது.

**கட்டணம் செலுத்தும் முறை.**- வெற்றிபெற்ற கொள்வனவாளரினால் விற்பனை முடிவில் கீழ்க்கண்டவாறு பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) மாகாண அதிகாரியின் வரியாக விற்பனை விலையில் 1% ;
(3) ஏல விற்பனையாளர் தரகு என விற்பனை விலையில் 2 1/2% ;
(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக 500 ரூபா ;
(5) விற்பனைச் செலவும் வேறு கட்டணமும் இருப்பின் அப்பணமும் ;
(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 90% இற்கான பணத்தை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் காலி பஹல டிக்சன் வீதி, இலக்கம் 22 எனும் நிலையத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் பிரதேச பிரதான அலுவலகத்தின் பிரதேச முகாமையாளர் அவர்களுக்கு செலுத்த வேண்டும் ; தொலைபேசி இலக்கம் : 091-2232311, 2234785, 2234171, 2223564 ; தொலைநகல் இலக்கம் : 091-2232230.

மேற்குறிப்பிட்டவாறு குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 10% இற்கான பணத்தைத் திரும்பவும் செலுத்தாது மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்வதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

உரிமை கோரும் ஒப்பினையையும் வேறு குறிப்பிட்ட விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம்.

கே. பீ. என். சில்வா (ஜே. பி.),
உத்தரவுபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர் மற்றும்
மதீப்பீட்டாளர்.

"இன்டர்ஸ்டேட் ஒக்சன்ஸ்",
இல. 74, 3 ஆம் மாடி,
ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,
கொழும்பு 10,
தொலைபேசி இல. : 077-1006829, -011-5925957.

9-97

### மக்கள் வங்கி - இரத்தினபுரி கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி எனும் அதிகாரத்தின்கீழ் விற்பனை அறிவித்தல்*

**ஏல விற்பனை**

